சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 02.06.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 38/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-1 |
| சாட்சியின் பெயர் | : | வடிவழகன் (எ) சத்தியமூர்த்தி |
| தந்தை பெயர் | : | மாணிக்கம் |
| கிராமம் | : | கீழத்தெரு, காட்டூர் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| மாவட்டம் | | திருவாரூர் |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 51 |

2026 ம் ஆண்டு ஜூன் மாதம் 02 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. காட்டூர் காலணி தெருவிற்கும், காட்டூர் கீழத்தெருவிற்கும் சுமார் 150 மீட்டர் தூரம் உள்ளதா என்றால் இல்லை 200 மீட்டர் தூரம் இருக்கும். எனது வீட்டிற்கு வெளியே மின்சார வாரியத்தின் மின் கம்பம் உள்ளது என்று சொன்னால் இல்லை. எனது வீட்டிற்கு அடுத்த வீட்டு வாசலில் தான் உள்ளது. எனது வீட்டிற்கு வாசலில் மின் வாரியத்தின் மின் கம்பம் உள்ளது என்றும் அதை நான் மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. திருவாரூரிலிருந்து காட்டூர் காலணி தெருவிற்கு செல்வதற்கு திருவாரூரிலிருந்து கும்பகோணம் செல்லும் சாலையை தான் பயன்படுத்துவார்கள் என்று சொன்னால் அனைவரும் அவ்வாறு பயன்படுத்துவது இல்லை. அந்த வழியாகவும் செல்லலாம். பெருவாரியான மக்கள் அந்த சாலையை தான் பயன்படுத்துவார்கள் என்றால் சரிதான். எனது வாகனம் நிறுத்தியிருந்த கார் செட் என்பது கீற்றுகூரையால் வேயப்பட்டது என்று சொன்னால் ஆமாம். எனது வீட்டு வாசலில் காம்பவுன்ட் சுவர் எழுப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

2. அ.சா-2 சந்திரபோஸ் என்பவர் என்னிடம் எதிரி வெற்றிவேலும்,இளம் சிறார்களும், என்னுடைய வாகனத்தை கொளுத்தியதாக சொல்லியுள்ள செய்தி தவறானது என்று சொன்னால் சரியல்ல. இளம் சிறார் நவீன்ராஜ் அவரது தகப்பனார் அந்தோனிசாமி அ.இ.அ.தி.மு.க-ல் முக்கிய பிறமுகர் என்றால் அவர் பெயர் தெரியாது. ஆனார் அவர் அ.இ.அ.தி.மு.க-ல் இருந்து வருகிறார். நான் விடுதலை சிறுத்தைகள் கட்சியில் திருவாரூர் மாவட்ட செயலாளராக 10 வருடமாக இருந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் வசிக்கும் காட்டூர் கிராமத்தில் விடுதலை சிறுத்தை கட்சியில் உறுப்பினர் சேர்ப்பதற்கும், நவீன்ராஜ்

தகப்பனார் அ.இ.அ.தி.மு.க-ல் உறுப்பினர்களை சேர்ப்பதில் எங்கள் இருவருக்கும் கருத்து வேறுபாடு இருந்தது என்று சொன்னால் எங்கள் கட்சியில் உறுப்பினர் சேர்க்கை நடைபெறுவதே இல்லை. அதனால் கருத்து வேறுபாடு நடந்தது என்று சொன்னால் தவறு. விடுதலை சிறுத்தைகள் கட்சியில் மாதம் மாதம் உறுப்பினர் சேர்க்கை வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் புகாரில் எனது வாகனத்திற்கு யார் தீ வைத்தார்கள் என்று அப்போது தெரியாது என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் ஆமாம்.

3. எனது வாகனம் எதிரியாலோ அல்லது இளம் சிறார்களாலோ கொளுத்தப்படவில்லை. எனது வீட்டிலிருந்த மின்சாரம் கசிந்து எனது வாகனம் தீக்கிரையாகிவிட்டது என்றால் சரியல்ல. அதனை மறைத்து அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக எதிரியை தொடர்ப்பு படுத்தி சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கு எதிரிக்கும் எந்த வித தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.06.02 17:03:56 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.